மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

முற்பகல் 10-40

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்போடை கிராமத்தில் 975 ஹெக்டேர் விவசாய நிலம் சாகுபடியில் உள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் 75-ம், ஆடவர் சுய உதவிக் குழுக்கள் 15-ம் செயல்பட்டு வருகின்றன. கத்தரிபுலம் கிராமம் என்பது செம்போடையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. எனவே, கிராம மக்களின் தேவையை அறிந்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தை செம்போடை கிராமத்தில் அமைத்துத் தர வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். விவசாய மக்களின் வாழ்வில் அக்கறை கொண்ட, மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு செயல்படுகின்ற அம்மாவின் அரசு, இதனைச் செய்து தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் தேத்தாக்குடி தெற்கு ஊராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, கட்டட வேலை நடந்து வருகிறது. அதற்கும் மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

37—

தூர் வாருதல்

***35059—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 பிப்ரவரி 20]

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டான் ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் தெப்பக் குளத்தைத் தூர் வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழ் மண்ணின் அன்னலட்சுமி! அகிலத்தையே அன்னார்ந்து பார்க்க வைக்கும் அன்னதானப் பிரபு! பசிப்பிணியைப் போக்கியதில் பாரதத்தில் எங்கள் அம்மா அவர்களுக்குத்தான் முதல் இடம். (மேசையைத் தட்டும் ஒலி) தீது செய்து அறியாத தெய்வம்! இந்த மண் கண்ட மாதா! எங்கள் கண் கண்ட தெய்வம்! மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை நன்றியோடு வணங்கி, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையினுடைய முதல் கேள்விக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், ஜெயங்கொண்டான் அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள ரூ.10 ஆயிரத்திற்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலில் உள்ள திருக்குளத்தைத் தூர் வாரிச் செப்பனிட, சுமார் ரூ.6 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் நிதிநிலையில் இச்செலவினை ஈடுகட்ட இயலாது என்றாலும், இதன் அவசியத்தை உணர்ந்து, மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு இதற்கான நிதியை இந்து சமய அறநிலையத் துறையிலிருந்து ஒதுக்கீடு செய்து, திருக்கோயில் தெப்பக் குளத்தைத் தூர் வாரி சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா, வேல் உண்டு வினை இல்லை தாயே! உங்கள் வெற்றிக்கு இனி ஏதும் தடை இல்லை தாயே எனக் கூறி எனது உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

காரைக்குடி தொகுதி, ஜெயங்கொண்டான் அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் தெப்பத்தேர் திருவிழா ஆண்டுதோறும் நடப்பது வழக்கம். அந்தக் கோயிலிலிருந்துதான் பழனிக்கு பாதயாத்திரையாக காவடிகளும் புறப்படும். பழனி திருக்கோயிலில் உள்ளதைப்போல மேல் திசைநோக்கி எம்பெருமான் அமர்ந்திருக்கின்ற காட்சியும் அந்தத் திருக்கோயிலுக்குச் சிறப்பம்சமாக இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், தெப்பத்தேர் திருவிழா ஆண்டுதோறும் நடக்கக்கூடிய நிலையில் தெப்பக்குளம் தூர் வாரித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மேலும், காரைக்குடி தொகுதி, தேவகோட்டை இறையான்சேரி மும்முடிநாதர் சௌந்தரநாயகி அம்மன் திருக்கோயில் மிகவும் பழமைவாய்ந்த கோயில் ஆகும். இந்தக் கோயிலைப் புனரமைத்து, கும்பாபிஷேகம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, சோழ மன்னனால் 811 ஆம் ஆண்டிலே கட்டி முடிக்கப்பட்ட புகழ்பெற்ற கோயிலாக இருக்கக்கூடிய வீரசேர உமையாம்பிகை கோயில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அன்னதானத் திட்டத்திலே சேர்க்கப்பட்டு, அன்னதானம் வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அந்தத் திருக்கோயிலுக்கு அன்னதானக் கூடம் அமைத்துத் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி*

அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, தமிழ்நாட்டில் சிதிலமடைந்த திருக்கோயில்களே இல்லை என்ற நிலையை எய்திட திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சிதிலமடைந்த திருக்கோயில்களையும், குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்ற திருக்கோயில்களையும் கணக்கெடுத்து, திட்டமிடப்பட்டு, திருப்பணி செய்திட நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 6,972 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இது, இதுவரை இல்லாததொரு வரலாற்றுச் சாதனையாகும்.

முற்பகல் 10-45

இதில் 2014-2015 ஆம் ஆண்டில் மட்டும் 1,621 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளன. மேலும், திருப்பணிகள் நடைபெற்று வருகின்ற 216 திருக்கோயில்களில் குடமுழுக்கு இந்த நிதியாண்டிற்குள் நடைபெறவுள்ளது. தொன்மைவாய்ந்த திருக்கோயில்களில் திருப்பணி செய்திட ஆண்டொன்றுக்கு 22.50 கோடி ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு 90 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 250 தொன்மையான திருக்கோயில்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்தச் சாதனை திருக்கோயில்களின் வரலாற்றில் ஒரு சகாப்தம் என்றே ஆன்மிக நோக்கர்களும், அறிவார்ந்தவர்களும் தெரிவிக்கிறார்கள். அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு திருக்கோயில்களில், ஒரு திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்திட வேண்டுமெனவும், இன்னொரு திருக்கோயிலுக்கு அன்னதானக் கூடம் அமைக்க வேண்டுமெனவும் இரண்டு கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அதனுடைய தேவைகளை அறிந்து, அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

[2015 பிப்ரவரி 20

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெருமைவாய்ந்த மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில் உலகப் புகழ்மிக்க அரித்திரா நதி தெப்பக்குளம் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள். அந்த அரித்திரா நதி தெப்பக்குளத்தை புனரமைத்து, அதில் படகு சவாரி போன்றவற்றைக் கொண்டுவந்து, அதனைப் பொழுதுபோக்குத் தலமாக ஆக்க வேண்டுமென்று எங்கள் பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கோரி வருகின்றனர். இன்று எங்களுக்கு ஓர் அறநிலையத் துறை அமைச்சர் கிடைத்திருக்கிறார். ஆகவே, நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியைச் சேர்ந்த அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில் பிரசித்திப்பெற்ற திருக்கோயில் ஆகும். மன்னார்குடி மதிலழகு என்று சொல்வார்கள். அந்தத் திருக்கோயிலுக்கு 322 ஆண்டுகளுக்கு பின்னர், 1995 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடத்திய தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இந்த அவையிலே தெரிவிப்பதில் நான் பெருமையடைகிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு மன்னார்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அரித்திரா நதி தெப்பக்குளத்தைத் தூர் வாரி செப்பனிட்டு, அதிலே பக்தர்களெல்லாம் படகு சவாரி செய்யும் வகையில், படகு விட வேண்டுமெனக் கோரிக்கை வைத்தார்கள். அதிலேயும், 2001-2006 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியின்போதுதான் ஒரு கோடி ரூபாய் செலவிலே மிகப் பெரிய

அளவில், அதுவரை அந்தத் தெப்பக்குளத்தில் தண்ணீர் இல்லாமல் யாரும் பார்த்ததே கிடையாது, தண்ணீரை முழுமையாக எடுத்து, முழுமையாகத் தூர் வாரியதும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களைத் தூர் வார வேண்டும், செப்பனிட வேண்டும் என்கிற அடிப்படையில், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை கட்டுப்பாட்டின் கீழுள்ள மொத்த திருக்கோயில்களில், 1,586 திருக்கோயில்களுக்கு 2,359 திருக்குளங்களில் 1,068 திருக்குளங்கள் புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் இருந்தன; மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றபின், 604 திருக்குளங்கள் சுமார் 3 கோடி ரூபாய் செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, நிதிநிலைக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில் அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

38—

பேருந்து வசதி

***40882—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூரிலிருந்து பெங்களூரு மற்றும் சென்னைக்கு நேரடியாக குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS